காலை முரசு

பக்கங்கள்:-22

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 24 | புதன்கிழமை | 28.05.2025 | அதிர்வு 297

## கெஹலிய ரம்புக்வெலவின் முன்னாள் இணைப்புச் செயலர் நிஷாந்தவும் விளக்கமறியலில்



இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவினால் "ஊழல்" என்ற குற்றத்தை இழைத்த சந்தேகத்தின் 06



# வடக்கில் காணி விடுவிப்புக்கு எதிராக தெற்கில் சிலர் இப்போதும் போர்க்கொடி

## நோர்வேயின் பிரதித் தூதுவரிடம் ஆளுநர் சுட்டிக்காட்டு

"அரசால் வடக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பாதைகள் விடுவிக்கப்படுதல் மற்றும் காணிகள் விடுவிக்கப்படும்போது தென்பகுதியிலுள்ள சில அரசியல்வாதிகள் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் நிலைமை இப்போதும் காணப்படுகின்றது."

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான நோர்வேயின் பிரதித் தூதுவர் மாரரைன் அம்டால் பொத்தெமுக்குச் சுட்டிக்காட்டினார். 05

# கொழும்பில் என்.பி.பி. ஆட்சியமைக்க இடமளியோம்!



## மொட்டுக் கட்சி திட்டவட்டம்

"கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கவில்லை. எனவே, அக்கட்சி ஆட்சியமைப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் ஆதரவு வழங்கப்படமாட்டாது. ஏனெனில் அது மக்கள் ஆணைக்கு முரணான செயலாக அமையும். எதிரணிகள் வசமே பெரும்பான்மைப் பலம் உள்ளது. ஆகவே, அரசுக்கு எதிரான சக்திக்கு ஆதரவு வழங்குவதில் எமக்குப் பிரச்சினை இருக்காது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 03




தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாகக் கபளீகரம் பண்ணுவதற்கு அரசு எடுத்த குள்ளநரித் தந்திரத் திட்டம் அரசுக்கு ஆரம்பத்திலேயே காலை வாரிவிட்டது.

இந்தத் திட்டத்திலிருந்து விலகி, சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை கை வாங்கும் முடிவை அரசுத் தலைமை எடுத்தமைக்கு காரணம் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி!' என்ற நிலைமைதான்.

மற்றைய தென்னிலங்கை கட்சிகளுக்கு கிடைக்காத பெரும் வாய்ப்பாக, வடக்கு – கிழக்கில், குறிப்பாக வடக்கில், ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்திக்கு முதல் தடவையாக கிடைத்த வாக்கு வங்கியை, இந்த வர்த்தமானி அறிவித்தலின் பலனாக உருவாகக் கூடிய சம்பவங்கள் அடியோடு துடைத்தெறிந்து விடும் என்று புலனாய்வு தரப்புகள் கொடுத்த எச்சரிக்கைத் தகவல்களின் அடிப்படையில்தான் இந்தக் கை வாங்கும் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை தமிழ்க் கட்சிகள் கையாள வகுத்த திட்டம் 06





# வடக்கு மாகாண ஆளுநருடன் புதிய பிரதம செயலர் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி தனுஜா முருகேசன் நேற்று செவ்வாய்க்கிழமை மரியாதை நிமித்தமாக ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராகக் கடந்த வாரம் ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து நியமனம் பெற்ற திருமதி தனுஜா முருகேசன், கைதடியிலுள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவான உறுப்பினர்கள் தொடர்பில் வர்த்தமானி

தேர்தல் ஆணைக்குழுவினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவான உறுப்பினர்களின் பெயர்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் வழங்குமாறு வலியுறுத்தி இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களுக்கு தேர்தல் ஆணைக்குழு வர்த்தமானி ஊடாக இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.



# சுற்றுலாப் பயணிகள் வருகை 1 மில்லியனைக் கடந்தது



இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1 மில்லியனைக் கடந்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி மே மாதம் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,006,097 ஆக பதிவாகியுள்ளது.

இந்த காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடரும் சண் தயாளனின் சாதனைகள்



வடக்கு மாகாணத்தின் புகழ்பெற்ற முன்னாள் விளையாட்டு வீரர் சண் தயாளன் தன்னுடைய 66 ஆவது வயதிலும் மெய் வன்மை நிகழ்ச்சிகளில் தொடர்ந்து சாதனைகளை நிலை நாட்டி வருகிறார்.

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 11 ஆவது இலங்கை மாஸ்டர் விளையாட்டு போட்டிகளில் 65 - 69 வயது பிரிவில் தான் பங்கு பற்றிய மூன்று மெய்வன்மை நிகழ்ச்சிகளிலும் குறிப்பிடத்தக்க சாதனையை அவர் நிலைநாட்டியிருக்கிறார்.

இந்தியா, மாலைதீவு, கனடா மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த திறமையான தடகள வீரர்கள் இந்த மெய்வன்மை விளையாட்டுகளில் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தடியூன்றிப் பாய்தலில் (2.1 மீ.) தங்கப்பதக்கம் (முதலாமி டம்), ஈட்டி எறிதலில் (28.87மீ.) வெள்ளிப் பதக்கம் (மூன்றாம் இடம்), தட்டெறிதலில்(24.95மீ.) நாலாமிடம் ஆகியவற்றை அவர் பெற்றுக் கொண்டார்.

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற இதே போட்டியில் தடி யூன்றிப் பாய்தலில் அகில இலங்கை சாதனையாக இருந்த 2.3 மீற்றர் என்பதை முறியடித்து, 2.32 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து புதிய சாதனையை அவர் நிலைநாட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை காலத்திலும் பின்னரும் கிரிக்கெட், உதைபந் தாட்டம், ஹொக்கி, கூடைபந்தாட்டம் மற்றும் மெய்வன்மை நிகழ்ச்சி யாவற்றிலுமே பல சாதனைகளை படைத்து முன்னணி வீரராக அவர் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விளையாட்டுத்துறைகள் அனைத்திலும் அவர் தகுதியும் சித்தியும் வரவேற்பும் பெற்ற மத்தியஸ்தர், பயிற்சி யாளர், விளையாட்டுத்துறை நிர்வாகி என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

அவர் தகுதி பெற்ற கிரிக்கெட் மத்தியஸ்தர். உதய்பந்தாட்ட நடுவர். ஹொக்கி மற்றும் கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் . மெய்வன்மைத்துறையில் தகுதி பெற்ற தட,கள மத்தியஸ்தர், நேரக் கணிப்பாளர், தொடக்குநர்.

இளம் வயதில் அகில இலங்கை இளைஞர் உதைபந்தாட்ட அணிக்குத் தலைமை தாங்கி, ஆசிய சுற்றுப் போட்டிகளில் பங்கு பற்றிய இலங்கை தேசிய அணியை அவர் கப்டனாக வழிநடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான சண் தயாளன் இப்போதும் கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இளைஞர் களுக்கு சவால் விடும் வகையில் துடிப்புடனும் சளைக்காம லும் திறமையுடனும் விளையாடி வருபவர். தமக்காக ரசிகர் பட்டாளம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் கொண்டிருப்பவர்.

இளமைக்காலத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், ஹொக்கி, கூடைப்பந்தாட்டம் ஆகியவற்றி யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித் துவப்படுத்திய ஒரே வீரர் என்ற பெருமையைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த விளையாட்டுத்துறை நிர்வாகியான அவர், உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக அருஞ்சேவையாற்றி பின்னர் ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போலி கடவுச்சீட்டு தயாரித்ததாக சந்தேகிக்கப்படும் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரி கைது



வெளிநாட்டில் உள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கெஹெல் பத்தர பத்மே என்பவருக்கு போலி கட வுச்சீட்டை தயாரித்து வழங்கியமை தொடர்பில் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் உதவி கட்டுப்பாட்டா ளர் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படை யில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைவிரல் அடையாளம் இன்றி கெஹெல்பத்தர பத்மேவின் கடவுச் சீட்டை குறித்த அதிகாரியே தயாரித்து வழங்கியிருக்கலாமென குற்றப்புல னாய்வுதிணைக்களம்சந்தேகம்வெளியிட் டுள்ளது.

கெஹெல்பத்தர பத்மே என்பவருக்கு போலி கடவுச்சீட்டை தயாரிக்க முயன்ற 2 சந்தேகநபர்கள் இதற்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்தஇருவரும்கடவுச்சீட்டைதயாரிப் பதற்காக கெஹெல்பத்தர பத்மே என்ப வரின் நிழற்படங்களை WhatsApp ஊடாக பெற்று அதனை வடிவமைத்து குடிவரவு - குடியல்வு திணைக்களத் தில் சமர்ப்பித்துள்ளதாக விசாரணை ளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு 2014ஆம் ஆண்டு பெற றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டின் ஊடாக கெஹெல்பத்தர பத்மே 2021ஆம் ஆண்டு வெளிநாடு சென்றுள் ளார்.

அத்துடன், மேற்படி கடவுச்சீட்டானது டந்த வருடத்துடன் காலாவதியாகியுள்ள தாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர கெஹெல்பத்தர பத்மேவின் நிழற்படத்தை பயன்படுத்தி இரண்டு வெவ்வேறு பெயர்களில் மேலும் 2 போலி கடவுச்சீட்டுகள் பெற்றுக் கொள் ளப்பட்டுள்ளப்பட்டுள்ளமை இது வரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசா ரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

## கொழும்பில் என்.பி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிகளின் கொள்கைகள் வெவ்வேறானவை. எனினும், நாட்டின் நலன் கருதி பொது விடயங்களின்போது ஒத்துழைப்புடன் செயற்படக்கூடும்.” - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# சில கடற்பிராந்தியங்களுக்கு செல்ல வேண்டாம்: வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல்

சிலாபம் முதல் புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பிராந்தியங்களுக்கும் காலி முதல் ஹம்பாந்தோட்டை ஊடாக காலி வரையான கடற்பிராந்தியங்களுக்கும் மறு அறிவித்தல் வரை செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

புத்தளம் முதல் கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சிலாபம் முதல் புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பிராந்தியங்களிலும் காலி முதல் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களிலும் மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடிய சாத்தியம் நிலவுகிறது.

சில சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசக் கூடும்.

மன்னார் முதல் கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பிராந்தியங்களிலும் காங்கேசன்துறை முதல் பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களிலும் கடல் சற்று கொந்தளிப்பாகக் காணப்படும்.

அதேநேரம் மன்னார் முதல் புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் கடல் அலையானது 2.5 மீற்றர் முதல் 3 மீற்றர் வரையான உயரத்துக்கு மேலெழக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# 15 மாவட்டங்களில் டெங்கு நோய் பெருகும் 3,916 இடங்களுக்கு சிவப்பு அறிவித்தல்



15 மாவட்டங்களில் உள்ள 95 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தினூடாக நுளம்புகள் பெருகக்கூடிய 31,145 இடங்கள் அடையாளம் காணப்பட்டன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், நுளம்பு முட்டைகள் மற்றும் குடம்பிகளுடன் கூடிய 6,077 இடங்களும் கண்டறியப்பட்டுள்ளன.

இதன்போது, வீடுகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள், கட்டுமான தளங்கள், தொழிற்சாலைகள், பொது இடங்கள், மத ஸ்தலங்கள் உட்பட ஒரு லட்சத்து 28,824 கட்டடங்கள் சோதனையிடப்பட்டுள்ளன.

அவற்றில் 3,916 இடங்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், 1,470 இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் டெங்கு மற்றும் சிக்குன்குன்யா நோய்களின் பரவல் அதிகரித்துள்ள நிலையில் கடந்த 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் நுளம்பு பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அகற்றுவதன் மூலம் நுளம்புகளால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




# அம்பாந்தோட்டை ஊடாக 9,151 வாகனங்கள் இறக்குமதி

கடந்த பெப்ரவரி மாதம் முதல் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் ஊடாக 9,151 பயன்படுத்தப்பட்ட மற்றும் புதிய வாகனங்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

வாகன அனுமதி செயல்முறையை விரைவுபடுத்த புதிய வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக நிர்வாகம் அறிவித்துள்ளது.

அதன்படி, சுங்க நடைமுறைகளை முறையாக நிறைவுசெய்த வாகனங்கள், தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தவுடன் 24 மணி நேரத்துக்குள் விடுவிக்கப்படுகின்றன.

விடுவித்தல் செயல்திறனை மேலும் அதிகரிக்க, ஆவண செயன்முறை நிலையங்களை வார நாள்களில் இரவு 8:30 வரையிலும், சனிக்கிழமைகளில் பிற்பகல் 1.00 மணி வரையிலும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை திருத்த அமைச்சரவை அனுமதி

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காகக் கடந்த பெப்ரவரி மாதம் 09 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த அமைச்சரவை குறிப்பைக் கவனத்தில் எடுத்து,

தற்போது இனங்காணப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் இனங்காணப்படும் திருத்தங்களை உள்ளடக்கிக் குறித்த சட்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதற்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் ஒருவரின் தலைமையில் தொடர்புடைய அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## வடக்கில் காணி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் பிரதித் தூதுவர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தின் நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில்ஆளுநரிடம்தூதுவர்கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் ஆளுநர் குறிப்பிட்டார். கடல் நீரைச் சுத்திகரிக்கும் செயற்றிட்டத்தின் ஊடாக குடிதண்ணீர் வழங்கல் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்கான செலவு அதிகம் என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், மாற்றுத் திட்டங்கள் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி யாழ்ப்பாணத்தில் முக்கியமானதாக மாறி வரும் நிலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறிமுறை இல்லை என்றும், இதன் காரணமாகப் பல சவால்களை எதிர்கொள்வதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும், விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய இரண்டு துறைகளினதும் உற்பத்திப் பொருட்கள் அப்படியே ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும், அவற்றை முடிவுப் பொருட்களாக்கி ஏற்றுமதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் இங்கு வலியுறுத்தினார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்நகருமானால், அநுரா அரசு தமிழர் தாயகத்திலும் சர்வதேசத்திலும் பல எதிர்பாராத நெருக்கடிகளையும் இக் கட்டுகளையும் சந்திக்க வேண்டி வரும் என்றும் புலனாய்வுத் தகவல்கள் அரசை எச்சரித்தன என்றும் கூறப்படுகின்றது.

ஒருபுறம் கிடைத்த வாக்கு வங்கி கூண்டோடு பறிபோகும் நிலைமையை இது ஏற்படுத்து என்றும், மறுபுறம் சமாளிக்க முடியாத சிக்கல்கள் நேரும் என்றும் அரசு தலைமைக்கு ஆலோசனை றப்பட்டதாக சில வட்டாரங்கள் தெரிவித்தன.

1961 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்தியமை போன்ற சட்ட மறுப்பு இயக்கத்துக்கு தமிழரசோடு ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து காய் நகர்த்தும் திட்டத்தை தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் முன்னெடுக்கவிருந்தார் எனத் தெரிகிறது.

தமிழர் தாயகத்தில், எல்லா அரச செயலகங்கள் மற்றும் முக்கிய அரசு நிறுவனங்களையும் ஒரே சமயத்தில் வழி மறித்து, அவற்றின் கதவுகளைப் பூட்டி, அரச நிர்வாகச் செயற்பாட்டை குழப்பும் நடவடிக்கையை ஓர் இயக்கமாக பெரிய அளவில் முன்னெடுக்க கட்சிகளுக்கு இடையே தயாரிப்புகள் நடைபெறுகின்றன என அரசுத் தலைமைக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸைக் கொண்டு இந்த நடவடிக்கைகளை முறியடிக்க அரசு முயன்றால், அது பெரும் நெருக்குவாரங்களை அரசுக்கு கொண்டு வரும் எனவும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது. அதுவும் விரைவில் – மூன்று, நான்கு மாதங்களில் – இலங்கை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஜெனிவாவில் பரிசீலனைக்கு எடுக்கவிருக்கையில், இத்தகைய வேண்டாத சூழ்நிலையை ஏற்படுத்தாமல் தவிர்ப்பது நல்லது என ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல்களை எதிர் நோக்கி இருக்கும் தமிழ அரசியல்வாதிகள், அதற்கு முன்னோட்டமாக இத் தகைய மோசமான நிலைக்குப் போட்டி போட்டுக் கொண்டு தீவிரமாக முன்னிறங்கக்கூடிய நிலை இருப்பதாகப் புலனாய்வுத் தரப்பினர் மதிப்பீடு செய்து இருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் தினம் போன்றவற்றை நினைவேந்துவதைப் படையினரின் கெடுபிடிகளையும் நீதிமன்றங்களையும் காட்டி முன்னர் அடக்கி வந்த மாதிரி, இப்போது வெடிக்கக்கூடியசட்டமறுப்புஇயக்கத்தைகையாள்வது நெருக்கடியாக இருக்கும் என்று புலனாய்வுத் தரப்புகள் கருதுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

போதாக்குறைக்கு இந்த நிலம் பிடுங்கும் வர்த்தமானி அறிவித்தல் சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் கூட அரசுக்கு எதிராக ஒன்றுபடுத்தும் ஒரு விவகாரமாக மாறி வருவதும் புலனாய்வு தரப்பினால் அரசு தலைமைக்கு எடுத்தியப்பட்டிருக்கலாம்.

இவற்றை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்த பின்னரே, 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற மாதிரி இந்த வர்த்தமானி அறிவித்தலை இப்போதைக் குக் கை வாங்குவது உசிதமானது, புத்திசாலித்தனமானது என்று அரசுத் தலைமை முடிவெடுத்ததாகத் தெரிகிறது.

தமிழர் தரப்பில் இப்போது தமிழ்த் தேசியத்தை ஒட்டிய ஓர் எழுச்சியைத் தருவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அரசு ஏற்படுத்திக் கொடுக்காமல் இருக்கும் புத்திசாதுரியமாக இந்த வர்த்தமானி கைவாங்கல் விவகாரம் அமைந்திருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

\+ + +

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அதிகாரத்தை அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையும் நேரடியாகப் பேசி இணங்குவதற்கு வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் இருப்பதாக நேற்று என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

ஆனால், நேற்று மதியம் கொக்குவிலில் இடம் பெற்ற தேசிய மக்கள் முன்னணியின் பத்திரிகையாளர் மாநாட்டின் முடிவில் தமிழரசு கட்சி தொடர்பில் தூக்கி எறிந்து, அதன் மாகாண முதல்வர் வேட்பாளரை தோற்கடிக்க தங்கள் கட்சியின் 'தும்புக்கட்டை' போதும் என்ற திமிர்த்தனத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்து, மேற்படி இரு கட்சித் தலைவர்களும் தங்களுக்குள் சந்தித்து பேசி இணக்கம் காண்பதற்கான வாய்ப்பை அடியோடு நாசமாக்கி விட்டது என நம்பகரமாகத் தெரிய வருகிறது.

இனி என்ன, தமிழரசு – ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி (சங்கு கட்சி) ஆகிய இரண்டு தரப்புகளும் ஒன்றித்து, மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவதற்கான வாய்ப்புகள் மட்டுமே சாத்தியம் என்று தெரிகின்றது.

சைக்கிள் கட்சி தன் தரப்பில் தனக்கு கிட்டிய உதிரிகளில் ஒன்றை தும்புக்கட்டையாகச் சோடித்து சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பயணம் கிளம்ப வேண்டியதுதான்...!

## முன்னாள் இணைப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் முன்னாள் இணைப்புச் செயலாளர் நிஷாந்த பண்டார பஸ்நாயக்க என்பவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் தனுஜா லக்மாலி உத்தரவு பிறப்பித்தார்.

வழக்கின் முதலாவது சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் அப்போதைய இணைப்புச் செயலாளராக இருந்த நிஷாந்த பண்டார பஸ்நாயக்க என்ற மூன்றாவது சந்தேக நபரின் பெயரில் திறக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கில் அமைச்சின் பணம் வைப்பிலிடப்பட்டிருந்ததாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இந்த வங்கிக் கணக்கில் இருந்த பணத்தை கெஹலிய ரம்புக்வெலவின் மகளான அமாலி ரம்புக்வெல தவறாகப் பயன்படுத்தியதாகவும் சந்தேகபர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் தெரிவித்ததாக அதிகாரிகள் கூறினர்.

இதன்போது இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி,

"நீதவான் அவர்களே! இந்தச் சந்தேக நபரை வழக்கின் மூன்றாவது சந்தேக நபராகப் பெயரிட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துகின்றோம். சந்தேகநபர் வழக்கின் முதலாவது சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் இணைப்புச் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார்.

அமைச்சின்நிதிவைப்பிலிடப்படுகின்ற வங்கிக்கணக்கொன்று இவரது பெயரில் தனியார் வங்கியொன்றில் நடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இந்த வங்கிக்கணக்கு இவரது பெயரில் இருந்தாலும் அதனை முதலாவது சந்தேகநபரான கெஹலிய ரம்புக்வெலவின் மகளே பயன்படுத்தியதாக இவர் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் வாக்குமூலமளித்தார்.

இந்த வங்கிக்கணக்கில் அவ்வப்போது 20000, 30000, 50000 , 100000 ரூபா என பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. இவர் அறிந்திருந்த நிலையிலேயே இவரது வங்கிக்கணக்கு வேறொரு தரப்பினரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நீதிவான் அவர்களே இந்தச் சந்தேக நபர் இந்தக் குற்றத்தைப் புரிவதற்கு உடந்தையாகச் செயற்பட்டுள்ளார். இந்த மூன்றாவது சந்தேகநபர் தவறு என்பதை உணர்ந்துகொண்டே இலஞ்ச, ஊழல் சட்டத்தின் கீழ் ஊழல் என்ற குற்றத்தைச் செய்துள்ளார். தொடர்ந்தும் விசாரணை நடத்தப்படுகின்றது. சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.". – என்றார்.

இதன்போது முன்னிலையான சந்தேக நபரான முன்னாள் இணைப்புச் செயலாளரின் சட்டத்தரணி, "நீதவான் அவர்களே எனது சேவை பெறுநர் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் அழைப்பின்றி தன்னார்வமாகச் சென்று ஆணைக் குழுவில் சாட்சியமளித்தார். அவரது பெயரில் வங்கிக்கணக்கு திறக்கப்பட்டிருந்தது. அந்த வங்கிக் கணக்குக்கான அனைத்து வங்கி அட்டைகளும் சந்தேக நபரான அமைச்சரின் மகளிடமே இன்னமும் உள்ளது."?என்றுவாக்குமூலமளித்துள்ளார்.

இவரது பெயரில் வங்கிக் கணக்கு இருந்தாலும் இவர் அதனை பயன்படுத்தவில்லை. இந்த வங்கிக் கணக்கிற்கு வந்த பணம் எங்கிருந்து வந்தது என்பது இவருக்கு தெரியாது. எந்த வங்கிக் கணக்கிற்கு சில நபர்களின் பெயர்களில் பணம் வந்துள்ளது. எனது சேவைபெறுநர் தகவல்களை மறைக்காமல் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் வாக்குமூலமளித்துள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்கக்கூடாது. இவரை அரச சாட்சியாளராக பயன்படுத்த வேண்டும். எனது சேவைபெறுநர் விசாரணைக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க தயாராகவுள்ளார். தகுந்த பிணை நிபந்தனையின் கீழ் அவரை விடுவிக்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்." என்றார்.

விடயங்களை ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்ததுடன் அன்றைய தினத்தில் விசாரணையின் முன்னேற்றம் தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கையிடுமாறு விசாரணை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். வழக்கு ஜூன் 3ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஊடகத்துறை சுகாதாரம் சுற்றாடல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல செயற்பட்ட 2021 – 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமது பிரத்தியேக பணிக் குழாமுக்குப் பெயரளவில் மாத்திரம் 15 பேரை இணைத்துக்கொண்டு அவர்களுக் கான சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு ஆகியவற்றைத் தமது தனிப்பட்ட செலவுகள் மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு 80 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இந்த வழக்கு விசாரிக்கப்படுகின்றது.

இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பிலும் ஐக்கிய மக்கள் சக்தியின் தரப்பில் அமைப்பாளர், மகளிர் அணிச் செயலாளர் ராஜினாமா

(கனகராசா சரவணன்)

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருள்ராஜ் ஜெயகாந்தன் மற்றும் மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி ரவீந்திரநாதன் கண்ணகி ஆகிய இருவரும் கட்சியில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை இராஜனாமாச் செய்துள்ளனர் என அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வெஸ் ஒவ் மீடியா கற்கை நெறி நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் இந்த அறிவிப்பை அவர்கள் விடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து கடந்த 5 வருடங்களாக கட்சிக்காக செயற்பட்டோம். உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு கட்சி சார்பில் போட்டியிட்டோம். இதன் போது இரண்டு பட்டியல் ஆசனங்கள் கிடைத்தன.



இந்த இரண்டு ஆசனங்களும் மட்டக்களப்பு நகரில் ஒருவருக்கும் மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் முஸ்லிம் பெண் ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனவே கட்சிக்காக உழைத்த பலர் இருக்கின்ற நிலையில் ஒரு வருடத்துக்கு ஒருவர் என மாற்றி ஆசன ஒதுக்கீட்டை செய்யுமாறு கட்சியிடம் கோரினோம். கட்சி அதனை செவிமடுக்கவில்லை.

இந்த நிலையில் மாநகர சபை தேர்தலில் 98 வீதம் தமிழ் வாக்குகளை பெற்று கொடுத்த நிலையில் எங்களுக்காக அளிக்கப்பட்ட வாக்குகளை கொண்டு முஸ்லிம் பெண் ஒருவருக்கு போனஸ் ஆசனம் வழங்குவதை வாக்களித்த தமிழ் மக்கள் மிக கேவலமாக விமர்சனம் தெரிவித்து வருகின்றனர்.

எனவே இது தொடர்பாக கட்சியின் கவனத்துக்கு கொண்டு வந்தோம். ஆனால் அவர்கள் அதற்கான தீர்வைத் தரவில்லை. எனவே இவ்வாறு தீர்வை வழங்காத நிலையில் கட்சியில் இருந்து நானும் மகளிர் அணி செயலாளரும் இராஜனாமா செய்யத் தீர்மானம் எடுத்து இராஜனாமா கடிதத்தை கட்சிக்கு அனுப்பியுள்ளோம்.– என்றார் மாவட்ட அமைப்பாளர் அருள்ராஜ் ஜெயகாந்தன்.



# வவுனியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்









(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள வன்னிப் பிளாசா விடுதியில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியாவில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வு கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் முன்னிலையில் இடம்பெற்றது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வவுனியாவில் உள்ள சபைகளில் 26 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாநகரசபையில் ஆட்சி அமைக்க தேசிய மக்கள் சக்திக்கு சாதக நிலையாம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் நம்பிக்கை

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை உட்பட வன்னியின் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கான சாதக நிலமை உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.



வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையானது பல்வேறு பிரச்சினைகளுக்குட்பட்டதாக இருக்கிறது. நாம் ஏனைய கட்சிகளுடனும், சுயேச்சை உறுப்பினர்களுடனும் பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். தனிப்பட்ட ரீதியாகவும் உறுப்பினர்களுடன் பேசியுள்ளோம்.

வவுனியாவில் சிங்கள பிரதேசசபை, வவுனியா மாநகரசபை, தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் மன்னாரில் முசலி, நானாட்டான் ஆகிய சபைகளில் நாம் ஆட்சியமைப்பதற்கான சாதகமான நிலமைகள் காணப்படுகின்றன.

எமது கொள்கைகளை ஏற்று செயற்படுபவர்களுக்குத் திறந்தமனதுடன் அழைப்பு விடுக்கின்றோம். எமது கொள்கைகள், சிந்தனைகள் கட்சியின் விழுமியங்களுக்கு ஏற்ற வகையில் ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் நிச்சயமாக அவர்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்க நாங்கள் காத்திருக்கின்றோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது உள்ளூராட்சி மன்றங்களூடாக பல்வேறுபட்ட செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கின்றது.

எமது வெற்றிக்கு ஊடகவியலாளர்களும் உதவியுள்ளனர். அதற்கு எமது நன்றிகளை கூறிக்கொள்கின்றோம். நியாயமான ஊடகவியலாளர்கள் இங்கு உள்ளனர். அவர்களது சேவைக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். ஆனால் ஒரு சில ஊடகவியலாளர்கள் இலாப நோக்குடன் மக்களை குழப்பும் விதமான பல்வேறு செய்திகளைப் பரப்புகின்றனர். அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கியே நாம் நாடாளுமன்றில் குரல் எழுப்பிவருகின்றோம். இன,மத, மொழி பேதத்திற்கு எமது அரசில் இடமில்லை. வவுனியாவில் மூன்று இன மக்களும் இருக்கின்றனர். அவர்களிடம் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. அவை தொடர்பான தீர்வை பெறுவதற்கு நாடாளுமன்றுக்கு அதனைர் தெரியப்படுத்துகின்றோம். அவற்றையும் ஊடகங்களில் பிரசுரித்து உங்கள் நடுநிலை தன்மையை பேணுமாறு அன்பாக கோரிக்கை விடுக்கின்றேன். – என்றார்.

# தொடர் வீதி விபத்துக்களில் 3 பேர் பலி; 36 பேர் காயம்!

(உடப்பு க.மகாதேவன்)

நாட்டின் பல பகுதிகளில் கடந்த சில மணிநேரங்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீதி விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளமையுடன், குறைந்தது 36 பேர் காயமடைந்துள்ளனர்.



கொழும்பு – வெல்லவாய வீதியில் வெலியாரவில் நேற்றுக் காலை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று பார ஊர்தி ஒன்றின் பின்பகுதியுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். 13 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 12 பஸ் பயணிகள் மற்றும் பார ஊர்தி சாரதியும் அடங்குவர்.


மற்றொரு சம்பவத்தில், யாக்கல – கிரிண்டிவெல வீதியில் வரப்பலானவில் பஸ்ஸ/டன் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் காயமடைந்தார்.

இதேவேளை, எறாவூர் – புன்னாக்குடா வீதியில் 2 ஆவது கிலோமீட்டர் தூணுக்கு அருகில் வாகனம் மோதியதில் பாதசாரி ஒருவர் காயமடைந்து உயிரிழந்தார்.

அவர் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். அவரது அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

மேலதிகமாக, நுவரெலியா, டொப்பாஸ் பகுதியில் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் 23 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் குருநாகல், கிரிவவுல பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனாதிபதிக்கு நன்றி!

வடக்கில் தமிழ் மக்களின் 5,960 ஏக்கர் காணிகளை கபளீகரம் செய்யும் இலக்குடன் முன்வைக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வடக்குக் கிழக்கிலிருந்து கிளம்பிய கடுமையான எதிர்ப்பின் பின்புலத்தில் வாபஸ் பெறும் தீர்மானத்தை இலங்கை அமைச்சரவை எடுத்திருப்பதாக நேற்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

காணி நிர்ணயச் சட்டத்தின் கீழ் உரிமை கோரப்படாத மக்களின் காணிகள் என்ற பெயரில் பெருமளவான நிலத்தை அரசு சுவீகரித்துக் கொள்ளும் கபட திட்டத்தோடு கடந்த மார்ச் 28ஆம் திகதி இந்த வர்த்தமானியை அரசு வெளியிட்டிருந்தது.

அடுத்த மாதம் ஜூன் 28ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பிரதேசங்களில் ஆவண ரீதியான ஆதாரங்களோடு உரிமை கோரப்படாத காணிகளை, அரச நிலங்கள் என்று அறிவிக்கும் குள்ளநரி திட்டத்தோடு, இந்த வர்த்தமானி சத்தம் சந்தடி இன்றி நாசூக்காக வெளியிடப்பட்டிருந்தது.

ஆயினும், இந்த விடயத்தை மே முதலாம் திகதி 'காலை முரசு' அம்பலப்படுத்தியமையை அடுத்து, தமிழ் மக்களும் அவர்களின் கட்சிகளும் ஒன்றுபட்டு இந்த சதி நாச வேலைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரு புறம் இந்த வர்த்தமானியை சட்டரீதியாக எதிர்கொண்டு, சட்டச் சவாலை முன்னெடுக்கும் பணியை தமிழரசு கட்சி - குறிப்பாக அதன் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையில் - மேற்கொண்டது. அதே சமயம் தமிழரசும், பிற தமிழ்த் தேசியக் கட்சிகளும் அரசின் இந்த நகர்வுக்கு எதிராக நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் இன்றைய தினத்தை குறிப்பிட்டு, அதற்கு முன்னர் இந்த குள்ளநரித் திட்ட வர்த்தமானி அறிவித்தலை இலங்கை அரசு கைவாங்காவிட்டால், இன்றைய தினம் முதல் பெரிய அளவில் எதிர்ப்புப் போராட்டங்கள், சட்டமறுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பிரகடனப்படுத்தியிருந்தார்.

அந்த நெருக்கடிகள் ஏற்படுவதற்கு முன்னரே, அந்த வர்த்தமானியைக் கைவாங்கும் முடிவை அமைச்சரவை எடுத்திருப்பதாக அறிவிப்புகள் வெளியாகின.

இந்த எதிர்ப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளோடு மற்றொரு சிறுபான்மையினரான முஸ்லிம்களினுடைய கட்சிகளும் ஒன்று சேர்ந்து, ஒரு குரலில் எதிர்ப்பை காட்ட ஐக்கியமானமை நிச்சயமாக ஆளுந்தரப்பை நெருக்கடிக்குள் ஆழ்த்தி இருக்கும் என்பது உறுதி.

எது, எப்படியாயினும், மக்களின் கடுமையான எதிர்ப்பைக் கவனத்தில் கொண்டு, தமது அரசு முன்னர் எடுத்த முடிவிலிருந்து பின்வாங்கும் நேர்மையான தீர்மானத்தை மேற்கொண்டமைக்காக அரசுக்கு - அமைச்சரவைக்கு - குறிப்பாக இரண்டுக்கும் தலைமை வகிக்கின்ற ஜனாதிபதிக்கு - தமிழர்கள் சார்பில் நன்றியை கூறுவது பொருத்தமானதுதான்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

34

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



1980 களில் ஜே.வி.பியினரின் பேரணி

திக்குத் தெரியாமல் இருக்கின்றவனுக்கு, தான் எப்படி வாழப் போகிறேன், எதை அடைந்து கொள்ளப் போகிறேன் என்ற குழப்ப மனோ நிலையில் இருக்கும்போது, அவனுக்கு ஒரு புரட்சியில் இறங்குவது புதிய பாதை ஒன்றைத் திறப்பது போலிருக்கும். தான் இருந்து கொண்டிருக்கின்ற சமுதாயத்தில் மாற்றம் வேண்டும், அதை மாற்ற வேண்டும் என்பது அவனுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுக்கின்றது. ஒரு புரட்சியாளன் தனது சிந்தனைகள் நல்லெண்ணம் கொண்டவை என்ற மனோநிலையை தனக்குள்ளேயே வளர்த்துக் கொள்கின்றான். தான் தனக்காக வாழவில்லை, மற்றவர்களின் நன்மைக்காகவே தான் வாழுகின்றான் என்பதைத் தன்னுடைய மனதில் வரித்துக் கொள்கிறான். அவனில் தன்னலம் இல்ல. தான் இலட்சியவாதி, சரித்திரங்களைப் படைப்பதற்காகப் புறப்பட்டவன் என எண்ணுகிறான். அவனைப் பொறுத்தளவில் ஓர் உருக்குலைந்த சமுதாயத்தில் இந்தப் புரட்சி ஒன்றையே அவன் சாசுவதமாகப் பார்க்கிறான். அவனுடைய புரட்சியின் இலட்சியம் ஒன்றே அவனை ஆட்கொண்டு விடுகிறது. உலகம் அவனுக்கு இரண்டு விதங்களில் தெரிகிறது. கறுப்பு அன்றில் வெள்ளை. அதில் கதாநாயகர்கள் - வில்லன்கள். அவனுடைய அறிவு, புத்திசாலித்தனம் இவற்றில் கட்டுப்பட்ட பின், அவன் கறுப்பை - வில்லனை - ஒரு வெறியுடன் தாக்குகிறான்.

இன்னும் ஒரு பார்வையில் விவரித்தால், புரட்சிவாதி ஓர் ஆழமான விரக்தியின் பிறப்பே. அப்படிப் பார்க்கும்போது ஜே.வி.பி. அமைப்பு அப்படியான ஆழமான விரக்தியில்தான் தோன்றியது. ஒரு பிரகாசமான இடதுசாரித் தத்துவங்களை கொண்ட சுபீட்சத்தை அது முன் வைத்தாலும், அதனால் ஈர்க்கப்பட்டு இணைந்தவர்கள் யாபேரும் சமுதாயத்தையொட்டி விரக்தியில் தோய்ந்தவர்கள். அதனால்தான் அவர்கள் சமுதாயத்தின் நாளையையோ, எதிர்காலம் என்பதையோ கணக்கெடுக்காமல், தங்களது மக்களுக்கு எதிராகவே கட்டுக்கடங்காமல் வன்முறைகளை நடத்தினார்கள்.

அந்த வன்முறைகள் விரக்தியில் எழுந்தவையே ஒழிய, நம்பிக்கை தருவனவாக இருக்கவில்லை. வஞ்சத்துக்கு நடத்தப்பட்டனவே ஒழிய, மாற்றத்திற்கானவை அல்ல. எந்தச் சமுதாயம் அவர்களை அப்படி உருவாக்கியதோ, சிங்களத்திலேயே படிக்க வைத்து, கலாசாலை படிப்பும் அப்படியே, தொழில் துறைக்கு உதவாமல், வேலையற்ற பட்டதாரிகளாக உலாவ வைத்தமையால், அந்தச் சமுதாயத்துக்கு எதிராக வஞ்சம் தீர்க்க அவர்கள் புறப்பட்டார்கள். அந்தச் செயற்பாடுகள், நாடு இருந்த கட்டமைப்பில் தங்களது கூக்குரல்களைக் கேட்கும், அதனால் தாங்கள் விரும்பும் மாற்றத்தைக் கொண்டு வரும் என எண்ணாதபடியினால், அந்தச் சமுதாயத்தின் அழிவையோ சீரழிவையோ அவர்கள் பொருட்படுத்தவில்லை.

இதற்கு ஏற்றதாக விஜயவீரா போன்ற தலைவர்கள்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



1980 களில் ஜே.வி.பியினர்

தொடர்ச்சி▲

இளம் சமுதாயத்தைத்தான் அணுகினார்கள். தங்களது வாக்கு வன்மையால், போதனைகளை ஏற்றுக் கொள்பவர்களாக இந்த இளைஞர்களை மாற்ற முடிந்தது. விஜயவீரா கூட வெளிநாட்டில் படித்து சரளமாக ஆங்கிலம் பேசக் கூடியவர். அவரே தான் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையில் தவிக்கிறேன் என்ற போது, அவருடன் இந்த - விரக் தியிலிருந்த இளைஞர்கள் நேசம் பாராட்டினார்கள். 1983 இல்,1989 இல் என அவர்கள் அந்த சந்ததியில் இருந்த இளைஞர்களை அணுகிச் சேர்த்தார்கள். அறகலய காலத்திலும் விரக்தியுற்ற இளைஞர்களை மூலதனமாக்கி, அதன் மூலம் பதவிக்கு வந்தவர்கள், மாற்றம் தேவை என்ற கோஷம். ஆனால் அனுபவக் குறைவுகளினாலும், கொள்கைவாதக் கால் கட்டுக் களாலும் எவை நாட்டில் புதிய யுகத்தை தர முடியுமோ, அவற்றை விலத்து நடந்து கொண்டே போகிறார்கள்.

பழைய ஜே.வி.பி. தலைவர்கள் யாருமே இல்லை. ஆனாலும் மக்கள் தாங்கள் செய்தவை எல்லாவற் றையும் மறந்து விடுவார்கள், ஏனெனில் சஞ்சலமும் சங்கடமுமான உலகில் மக்களுக்குத் தத்தமது தனிப்பட்ட தொல்லைகள் பெரிதாக இருக்கும் போது மற்றவை யாவற்றையும் மக்கள் எளிதில் மறந்து விடுவார்கள் என நம்பினார்கள்.

ஆனாலும், அநுரா தலைமைப் பதவியை ஏற்று முன்னர் நடந்த வன்முறைகளுக்கு மன்னிப்புக் கோரி, 2015 இல் தொடர்ந்து வந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதியாக தேர்தலை எதிர்கொண்ட போதும் மக்கள் ஜே.வி.பி. செய்த வன்முறைகளை மறக்கவில்லை.

2024 ஆம் ஆண்டு தேர்தலில், வங்குரோத்து நிலைக்கு மக்கள் மாற்றம் தேடி, பழைய தலை வர்களுக்கு எதிராக இவர்களைத் தேர்ந்தனர். அவர் களது முகங்களையும் முன்னைய வன்முறைகளையும் தேசிய மக்கள் சக்தியின் மற்றைய அங்கத்தினர்களின் முகமூடிகள் மறைத்திருந்தன. 1971 ஆம் ஆண்டில் இருந்த அவர்களது அடிப்படைக் கொள்கை திட்டத் திற்காக அவர்கள் வாக்களிக்கவில்லை. பழைய அரசியல்வாதிகளை மாற்ற வேண்டும் என்பதே மக்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. ஆனால் தாங்கள் நினைத்ததை திணிக்க வேண்டும் என்ற பண்பு அவர்களில் நிறைய இருக்கின்றது.

இந்தப் பார்வை 1976 ஆம் ஆண்டு வெளிப்பட்ட தமிழ் விடுதலைக் குழுக்களுக்கும் பொருந்தும். அவர்களும் எதிர்காலத்திற்கு ஒரு வழி இல்லாமல், திறமையான புள்ளிகள் பெற்றாலும் பல்கலைக் கழகத்துக்கு போக முடியாமல், படித்தும் வேலை வாய்ப்பு இல்லாமல், விரக்தியில் வாழ்ந்தவர்கள். இவர்கள் சமுதாய மாற்றத்தை நோக்கி போராட முயலவில்லை. தங்களை சிங்களப் பேரினவாதத் திலிருந்து வெளியேற்றி, விடுதலை பெற்று விட்டால், அது தங்களது வாழ்வில் சுபீட்சத்தைக் கொண்டு வரும் என நம்பினார்கள். அன்றைய நாள்களில் இருந்த கூட்டணித் தலைவர்களின் - முக்கியமாக தளபதியாகப் பார்க்கப்பட்ட அமிர்தலிங்கத்தின் - எழுச்சியுடன் விடுதலை வேட்கை கொண்ட பயணத் தைத் தொடங்கினார்கள்.

இந்தத் தமிழ் இளைஞர்களின் விரக்தியின் வெளிப்பாடுகள் கூட நம்பிக்கையைத் தரக்கூடிய வையாக இருக்கவில்லை. ஆயினும் ஜே.வி.பியோ, தமிழ் இளைஞர்களோ இரு பகுதியினரும் உணர்ச் சிகளில்தான் இயங்கினார்கள். வடக்கிலும், தெற்கிலும் தத்தமது தேசபக்தியில் 'தேசப்பற்றாளன்', 'துரோகி' என்ற முத்திரைகளில் கொலைகள் நடந்தன. இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து, தாங்கள் அரசை கவிழ்த்து விட வேண்டும் என ஜே.வி.பி. தங்களது வன்முறைகளை மேற்கொண்ட பொழுது, தமிழ்ப் பகுதிகளிலோ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்களாக தாம் வந்துவிட வேண்டும், இயங்க வேண்டும் என மற்றைய விடு தலைக் குழுக்களை துரோகிகளாக அழித்துக் கொண்டிருந்தனர். மக்கள் இதன் விளைவுகளைப்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

பார்த்தவர்கள், பின்னர் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் 'பயங்கரவாதிகளாக' சித்திரித்து அழிக்கப்பட்டதையும் அவதானித்தவர்கள், 38 ஆண்டுகளுக்கு மேலான தமிழ் மக்களது போராட்டமும் அதற்காக அவர்கள் கொடுத்த விலையும் தியாகங்களும், கடைசியில் தமிழ் மக்களை அவர்களது சிங்கள சகோதரர்களிடம் அல்ல, அவர்களிடையே இருந்த பேரினவாதிகளிடம் தான் கையளித்தது என்பதைக் கண்டனர்.

பிரபாகரன் இருந்தவரை அவரது வசீகரத்தாலும் ஆளுமையாலும், நாட்டிலும் புலம்பெயரிலும் தமிழர் விடுதலைக்காக அவர்களது அபிலாசைகளுக்காக ஆதரவுத்தளங்களை உருவாக்கி, நாட்டில் தங்களது அழிப்புத் தடுக்கப்படாது போனால், புலம் பெயர் மக்கள்தான் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என அறைகூவியவர் பிரபாகரன் தான். விடுதலைப் புலிகள் என்ற ஒற்றைப் பரிமாண அணுகு முறையில் அவர் எடுத்த முடிவுகளுக்கு எதிர்ப்பின்றி விடுதலைப் போராட்டம் நடத்தப்பட்டது. அவர் எல்லாம் தெரிந்தவராகவும், அசகாய சூரன் எனவும் போற்றிய பலர் இருந்தபோது, தமிழ் மக்களுக்கு நடந்தவை எல்லாவற்றுக்கும் அவரே காரணம் என்று தூற்றுவோர் அன்றும் இன்றும் இருக்கிறார்கள். இந்த வருடம் வரை பிரபாகரன் இறக்கவில்லை, வருகிறார், அவரது மகள் துவாரகா வந்துவிட்டாள் எனப் புலம்பெயர் அரசியலில் கால்பதிக்க விரும்பியவர்கள், கால் சறுக்கி விழுந்து கிடக்கிறார்கள். ஆனால் இன்றைய சர்வதேசச் சூழலில் பிரபாகரனைக் காப்பியமாக்கியோ, அன்றில் அவர்களது புலம்பெயர் அமைப்புக்களை முன் வைத்தோ தமிழ் மக்களின் அரசியலை முன்னெடுப்பது தடையாக இருக்கிறது. ஆனால் இந்த விசுவாசிகளோ நந்தியாகத் தான் இருப்போம் என்கிறார்கள்.

ஆகவே பிரபாகரன்தான் எல்லா வீழ்ச்சிகளுக்கும் காரணம் என்று விமர்சிப்பவர்கள், அவருடைய பங்கை வரலாற்றுப் பின்னணிகளில் இருந்து பிரித்தெடுக்க முயலும் போது, ஏற்றுக்கொள்ளப்படாதவர்கள் ஆகிறார்கள். ஆகவே அவர்களும் கதிரைகளில் இருந்தும் ஊடகங்களிலும் விமர்சிப்பதை தவிர, மாற்றத்துக்கான இயங்கு நிலையில் இல்லை.

இதில் இன்னொரு சாரர் இரண்டு போக்குகளையும் கைக்கொள்ளாது, பிரபாகரனும் தமிழ் மக்களும் தங்களது அரசியல் போராட்டத்தில் விட்ட தவறுகளை அலசி ஆராய்ந்து, புதிய அணுகுமுறையில் புறப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். இந்த புதிய பாதையில் புறப்பட்ட புகையிரதத்தில் கணிசமானோர் ஏறினாலும், வண்டி புறப்படுவதற்கான சமிக்ஞை கிடைக்கவே இல்லை. ஆகவே விடுதலைப் போராட்ட அரசியல் தளத்தில் ஸ்தம்பித்து, பிரபாகரன் இறந்த காலத்தில் இருந்த அரசியல் தலைவர்களின் கைகளில் இருந்து அவர்கள் ஆப்பிழுத்த குரங்குகளாக விடுபடவும், விடுபட விரும்பாத ஒரு நிலையில் இந்த 15 வருடங்களையும் நினைவுகளையும் நடத்தி, உரிமைகள் தரப்படாவிட்டால் போராட்டமே வெடிக்கும் என அறிக்கைகளும் தந்து, வானத்தை நோக்கி கையேந்தியவர்களாக மக்களை விரக்தி நிலைக்கு கொண்டு வந்தார்கள்.

ஜனநாயக மரபுகளில் வாழ்ந்து கொண்டிருந்த புலம்பெயர் மக்கள் முன்னரும் கூட தங்களால் முடிந்த பண உதவி செய்துவிட்டு, போரின் முடிவில் உறவுகளுக்கு முடிந்த அளவில் பிராயச்சித்தம் செய்த பின்னர், அங்கு வளரும் விரக்தியில் ஈடு



காணி அமைச்சர் லால் காந்தா

படாமல் தள்ளி நிற்கின்றனர். ஏனெனில் அது - அந்த விரக்தி நிலை - அவர்களையோ, அவர்களது பிள்ளைகளையோ, பேரக் குழந்தைகளையோ நேரடியாகப் பாதிக்கவில்லை. வன்னியில் போருக்கு முழுமையாக முகம் கொடுத்து, அதன் வலியை இன்று வரை சுமந்து, அலைந்து திரிபவர்களை, இந்தப் புலம்பெயர் சமூகம் காஸா அன்றில் உக்ரைன் போன்ற நாடுகளில் உள்ளோர் போன்று பார்க்கின்றதே ஒழி, ஓர் உணர்ச்சித் திணிப்பில் பார்ப்பதில்லை. முகங்களைக் கொடுத்து போரின் கொடூரங்களை வாங்கிக் கொண்டவர்களை, ஏதோ சமுதாயத்தின் கழிவுகள், ஒட்டி விடக் கூடாதவை என்ற மனோபாவங்கள். அதன் பாதிப்பால் அகதிகளாக அந்த நாடுகளுக்கு ஓடியவர்களும் கூட அணைக்கப்படுவதில்லை. பயனுக்காக பாவிக்கப்படுகிறார்கள்.

ஆனால் தளத்தில் இந்த விரக்தி நிஜமானது. அந்த மக்களுக்கான வாழ்வாதாரத்தைப் பற்றிய எதுவித சிந்தனையும் இன்றி, உதவிக்கரங்கள் அனுப்பும் உலர் உணவுப் பொருள்களை விநியோகித்து, ஊடகங்களில் படம் பதிக்கும் பிரதிநிதிகளாகவே வலம் வந்தனர்.

இந்த விரக்தியின் இடைவெளிகளில் புகுந்து, பாதிக்கப்பட்ட அந்த மக்களை - அவர்களின் இளைஞர்களை - அவர்களின் உணர்ச்சிகளை சுண்டியவர்கள் தேசிய மக்கள் சக்தியினர். விடுதலைப் போராட்டத்தினால் கண்டது என்ன, ஒரு புதிய நாடு சம உரிமையில், சமதர்மத்தில், அமைக்கும் புரட்சியை ஏற்படுத்துவோம் என்ற போதனைகளில், தாம் கடைசியில் 'சரணம் சாமி கச்சாமி' என்று பாட வைக்கப்படுவோம் என்பதை விளங்காமல் - வரலாற்றுப் பாதைகளில் இருந்து அதனைத் தெரிந்து கொள்ளாமல் புதிய சகாப்தத்துக்கான புரட்சிக்கு புறப்படும் விரக்தியார்கள்.

இந்த இளைஞர்களும், மக்களும் தேசிய மக்கள் சக்தியின் உந்து சக்தியான ஜே.வி.பியின் பங்கினை நாட்டில் உள்ள தமிழர்களின் வரலாற்றிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்பதை உணர வேண்டும். அவர்களோடு முரண்படாது, இணைந்து முன்னேறலாம் என்ற கருத்தியல்கள் பிழையற்றவையாக இருக்கலாம். ஆனால் எந்த திசைகளில் அந்த முன்னேற்றம் அமையும்? 'ஒரு நாடு - ஒரு தேசம் - ஒரு மக்கள் - ஓர் அதிகாரம்' என்று அடிப்படைக் கொள்கையில்,

தொடர்ச்சி▼




2016 இல் லால் காந்தா, அநுரகுமார, ரில்வின் சில்வா, விஜித்த ஹேரத்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

தமிழர்கள் அடையாளம் அற்றவர்களாக, தனித்துவம் இல்லாதவர்களாக வாழ வைக்கும் திசையை நோக்கி நடக்கும் பாதையிலா? அப்படியானால் வரலாறுகளின் அடிப்படைகளில் அவை எவை என்ற புரிந்துணர்வுகள் உண்டா? அல்லது தேசிய மக்கள் சக்தி தமிழரின் தனித்துவத்திற்காக என எந்த அபிலாசைகளை நிறைவேற்றுவார்கள் என இப்போதைய தமிழ் அங்கத்தினருக்கு அது என்ன உறுதி அளித்திருக்கிறது - வார்த்தைகளை தவிர?

யுனெஸ்கோ மனித உரிமை குழு ஐக்கிய நாடுகள் சபைக்கு பரிந்துரைத்த சரத்து 14 'புரட்சி ஏற்படுத்தவும் கிளர்ச்சிக்கான உரிமை' என்ற பகுதியை இப்படியாக வடிவமைத்தது.:-

"ஒரு மனிதனின் அரசு, மனித உரிமைகளின் அடிப்படையான நியாயத்தையும், அவனின் அடிப்படை மனித உரிமைகளையும் மதிக்காது நடக்கும் பட்சத்தில், சாத்வீக முறைகளில் எதுவிதமான பரிகாரங்களும் இல்லாத இடத்தில், அவனுக்கு நியாயத்தையும் மனிதாபிமானத்தையும் தரக்கூடிய அரசாங்கம் ஒன்றை நிறுவ உரிமை உண்டு" - என்பதாகும்.

ஆனால் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அதன் தொனியைக் குறைத்து -

"ஒரு மனிதன் தனது இயலாத்தனத்தில் கடைசி வழியாக கொடுங்கோலுக்கும் அடக்குமுறைக்கும் எதிராக கிளர்ந்து எழுவதற்கு விடாமல் இருப்பதற்காக மனித உரிமைகள் சட்டங்களாக மதிக்கப்பட வேண்டும்" - எனக் குறிப்பிட்டது.

வேறு வழி இன்றி தங்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கும் கொடுங்கோலுக்கும் எதிராகவேதான் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து, இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கி நடத்தினார்கள். ஆனால் ஜே.வி.பி. தமிழ் மக்கள் சிங்கள அரசுகளின் அடக்குமுறைக்கு எதிராகத்தான் கிளர்ந்தெழுந்து போராடுகிறார்கள் எனத் தங்கள் கொள்கை வகுப்புகளில் ஏற்றுக்கொண்டதே இல்லை. அவர்களுடைய கிளர்ச்சிகள் 1971 இல் தொடங்கப்பட்டபோது அவர்களுக்கு எதிராகக் கொடுங்கோலோ, அடக்குமுறைகளோ இருக்கவில்லை. அரசியல் மாற்றத்துக்கும் அதிகாரத்துக்கும்தான் அதனை அவர்கள் நடத்தினர். பின்னர் தொடர்ந்தவையும் அவற்றுக்காகவே. விடுதலை குழுக்களைப் பயங்கரவாதிகளாகச் சித்திரித்து அவர்களது எதேச்சாதிகாரம் நறுக்கப்பட வேண்டும் என நின்ற ஜே.வி.பி., அப்பொழுது மக்களை வித்தியாசப்படுத்தவில்லை.

தங்களது கொள்கைகளை நிலை நிறுத்தத்தான் காணிகளை அரசு அபகரிக்காது என தற்போதைய வர்த்தமானி அறிவித்தலில் தொடர்புடைய காணிகளைப் பற்றி கூறும்போது காணி அமைச்சர் குறிப்பிடுகின்றார் போலும். "வடக்கு மக்களின் சொந்தக் காணிகளை அவர்களுக்கு உரித்துடன் வழங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழ் அரசியல் வாதிகள் மக்களை தவறாக வழிநடத்துகிறார்கள்" - என காணி அமைச்சர் லால் காந்தா தெரிவித்துள்ளார்.

இவ்வளவு வருடங்களும் - சுதந்திரம் அடைந்த காலங்களில் இருந்தாவது - அரசுக்குரிய காணிகள் எவை எனத் தெரியாமல் இருந்ததா? அப்படி ஆயினும் மக்களுக்கோ மற்றவர்களுக்கோ நியாயப்படி எதுவித முன்னறிவித்தலும் இன்றி, ஏன் வர்த்தமானி பிரசுரம் வெளிவந்தது என்பதற்கு அவரின் அரசியல் கொள்கைகளில் விளக்கம் இல்லை.

காணிகள் சம்பந்தமான வரலாறுகளை பேசுவதானால், 1957 ஜூனில் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட கடிதத்தையும் பின்னணியையும் பார்க்கலாம்.

இது, அநுராதபுரம் காணி அலுவலகக் கச்சேரியிலிருந்து, வவுனியா கச்சேரிக்கு 19 ஜூன் 1957-இல் 'பதவியா திட்டத்திற்கு குடியேற்றவாசுகளை அனுப்புவது' என்று தலைப்பில் அனுப்பப்பட்டது.

"ஐந்நூறு நாள்களுக்கு மேலாக ஏற்றுக் கொள்ளக் கூடிய சேவைகளை நீர்ப்பாசன, காணி அளவை, காணி அபிவிருத்தி, விவசாய பிரிவு, மலேரியா தடைப்பிரிவு போன்றவர்களில் நிறைவேற்றி இருந்தால் அவர்கள் சுமார் 700 பேர் அளவிலான குடியேற்றவாசிகள் பதவியா திட்டத்தில் அடுத்த வருடம் ஜூலை மாதம் குடியேற்றப்படுவார்கள்.

"அதைவிட இன்னும் ஒரு 434 குடியேற்றவாசிகள், கொழும்பு மாவட்டத்தில் இருந்து அவர்களது குடும்பத்தினரோடும் உடைமைகளோடும் வவுனியா புகையிரத நிலையத்துக்கு வருவார்கள். அங்கிருந்து 60 மைல் தூரத்தில் உள்ள பதவியா திட்டத்திற்கு அவர்கள் லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட வேண்டும். உங்களது வசமுள்ள லொறிகளை இந்த சேவைக்காகக் கையளிக்கவும்.

"எத்தனையாம் திகதி, நேரம், எந்தச் சமயத்தில் லொறிகள் தேவைப்படும் என்பது பற்றி மேலதிக

தொடர்ச்சி▼




ஐம்பதின் நடுப்பகுதியில் திட்டமிட்ட அரச சிங்களக் குடியேற்றம் நடைபெற்ற பதவியா நீர்த்தேக்க பிரதேசத்தின் பெயர்ப் பலகை.

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

தகவல் தரப்படும்"

- இதுதான் அந்தக் கடிதத்தின் சாரம்.

இந்தக் குடியேற்றவாசிகள் எஸ்.டி.பண்டாரநாயக் காவுக்கு கீழியங்கும் தன்னார்வத் தொண்டர் படையைச் சேர்ந்த சிங்கள மக்கள். எந்த ஒரு தமிழ் பிரஜையும் இந்தக் குழுவில் இருக்கவில்லை. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வேலை செய்த குறிப்பிட்ட குழுமங்களில், இப்படியாகக் காணி கையளிக்கப்படுகிறது, அதற்கு விண்ணப்பங்கள் செய்யலாம் என சுற்றுநிருபங்கள் கூட அனுப்பப்படவே இல்லை.

இப்படியான காணிக் கையளிப்புகள் அப்பொழுது அமுலில் இருந்த சட்ட விதிகளுக்கு மாறாகவே நடந்தன. அமைச்சர் லால் காந்தா இப்போது தெரிவிப்பது போல இந்த முயற்சி நல்லிணக்கத்தின் அடிப்படையில் எழுந்து, அங்கு குடியிருக்கும் காணியற்ற தமிழ் பிரஜைகளுக்கு கொடுக்கப்படுமா அன்றில் அரசாங்கம் கையகப்படுத்துமா என்ற கேள்வி இருந்தது. அதற்கு விடையிருக்கவில்லை.

ஆயினும், இந்தக் காணிக் கபளீகர வர்த்தமானி அறிவித்தல் தமிழர் தரப்பின் கடும் எதிர்ப்பை அடுத்து கைவாங்கப்படுவதாக நேற்றுச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. தமிழ் மக்கள் ஒன்று திரண்டு தங்கள் செயற்பாடுகளை வெளிப்படுத்தினால், அவை எத்துணை தூரம் தாக்கமும் காத்திரமும் நிறைந்தவை என்பதை, அரசாங்கத்தை இந்த வர்த்தமானியை வாபஸ் பெற செய்யக் கட்டாயப்படுத்திய நிலைமை உணர்த்துகிறது.

எனினும், தேசிய மக்கள் சக்தியின் தமிழ் உறுப்பினர்கள் தங்கள் அழுத்தம்தான் இதைச் செய்ய வைத்தது என்று கதை அவிழ்த்து விட முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

(தொடரும்)



பதவியா நீர்த்தேக்கம்





# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஒரு ‘போஸ்மோர்ட்டம் ரிப்போர்ட்’!

- என்.விஜேன் -

ஒருவாறாக உள்ளூராட்சி தேர்தல் முடிந்து விட்டது. தமிழ்க் கட்சிகள் வடக்கு - கிழக்கில் மாபெரும் வெற்றி என்று புளங்காகிதம் அடைகின்றன. ஆனால் இது உண்மையில் பெரு வெற்றி அல்ல. அநேகமான முடிவுகள் தொங்கு சபைகளுக்கே வழி வகுத்துள்ளன. அத்துடன் பொது எதிரியாக கருதி எல்லாத் தமிழ் கட்சிகளும் குறிவைத்தாலும், தேசிய மக்கள் சக்தி கணிசமான வாக்கு வங்கியை (இரண்டாவது இடம்) தமிழ்ப் பிரதேசங்களில் தக்க வைத்துள்ளது. எனவே தமிழ்க் கட்சிகளின் அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறானதாக இருக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். சற்று ஆராய்வோம்.

### தமிழரசு நிலைமை

முதலில் முதலிடத்தில் வந்த தமிழரசுக் கட்சியை எடுத்துக் கொண்டால் சற்றே மீண்டும் ஓர் அவமானத்தைத் தவிர்த்துக் கொண்டுள்ளது மட்டுமன்றி 2018இல் தமிழ் தேசிய கூட்டமைப்பாக மற்ற 3 கட்சிகளுடன் இணைந்து பெற்ற வாக்குகளை விட கூடுதலாக 2025 இல் தனித்து நின்று பெற்றுள்ளது. இது பாராட்டப்பட வேண்டியது. சுமந்திரன் - சிறிதரனிடையே இருந்த நீயா, நானா யுத்தம் ஒத்திப் போடப்பட்டு ‘யாவும் நலமே’ என்ற படம் காட்டப்பட்டது மட்டுமல்ல, நேரடியான மற்றும் மறைமுகமான தனிநபரை குறிவைத்த தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன. மறைந்த முன்னாள் தலைவர் மாவையின் ‘பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்’ என்ற நிலைப்பாட்டை அனைவரும் தவிர்த்தார்கள். இவற்றால் மக்கள் மனதில் ஓரளவு நம்பிக்கை துளிர்விட்டது. மேலும் வேட்பாளர் நியமனங்கள் அந்தந்த சபைகளில் பொறுப்பாக இருந்தவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக பெரும்பாலும் தகுதிவாய்ந்த, மக்களால் எற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கே நியமனம் கிடைத்தது. அவர்களின் தனிப்பட்ட செல்வாக்கும் தமிழரசுக் கட்சி முன்னிலை பெற்றதற்கு ஒரு காரணம்.

ஆனால் இன்னமும் தீர்க்கப்படாமல் புகைந்து கொண்டு இருக்கும் உட்பூசல் காரணமாகவே தமிழரசுக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போனது என்பது சிறு பிள்ளைக்கும் கூட புரியும். மேலும் மேடைகளில் அநுரவின் கட்சியை வீழ்த்தி நம் ஊராவது நம்முடன் இருக்கட்டும் என்ற (கெஞ்சல்) பிரசாரத்தை தவிர, தமது கட்சியினர் வென்றால் அந்தந்த சபைகளில் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பார்கள் என்ற கொள்கை விளக்கங்கள் நான் அறிந்தவரை மேடைகளில் கேட்கவும் இல்லை, பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் பார்க்கவும் இல்லை. நான் பல முறை எழுதியமையைப் போன்று யுத்தத்திற்கு பின்னரான தலைமுறைகள் வெறும் உரிமைக் கோஷங்களை அல்ல எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பானது எவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகள் வழங்கும் என்பதே. இதில் வீதி மற்றும் தெரு விளக்குகள், வடிகால்கள் பராமரிப்பு, குப்பைகள் அகற்றும் பொறிமுறை, சுத்தமான பொது கழிப்பறைகள், பசுமையமாக்கல், நகரினை அழகு படுத்தல் போன்ற பல விடயங்கள் அடங்கும். முக்கியமாக உள்ளூராட்சி மன்றங்கள் நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமா அன்றேல் பழைய புளித்துப்போன முறைகளில்தான் முன்னெடுக்கப்படுமா எனப் பல்வேறு எதிர்பார்ப்புகளை மக்கள் கொண்டுள்ளார்கள். எனவே இந்த இளம் வாக்காளர்கள் அதிகளவாக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததில் ஆச்சரியமில்லை.

உரிமைக் கோஷம் எம்முடன், அபிவிருத்தி திட்டங்களோ அரசுடன் என்ற நிலைப்பாட்டில் இருந்தால் அடுத்த தேர்தலில் வாக்கு வங்கி மீண்டும் சரிவடையும் என்பதை மறக்க வேண்டாம். இரண்டையும் சம நிலைப்படுத்தி (balance) அரசியல் செய்ய இனியாவது முயற்சிக்க வேண்டும்.

கிளிநொச்சியின் சிற்றரசர் சிறீதரன் தனது கோட்டையை பலமாக தக்கவைத்துக் கொண்டுள்ளமை பாராட்டத்தக்கது. இனியாவது சுமந்திரனும் சிறிதரனும் கட்சியின் நலனை கருத்தில் கொண்டு ஒரு நல்ல இணக்கப்பாட்டுக்கு வருவார்களா? கட்சிக்கு எதிரான வழக்குகளை முடிவிற்கு கொண்டு வருவார்களா என்று பலரும் எதிர்பார்த்திருக்க, சிறிதரனின் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது. தேவையே இல்லாமல் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் சுமந்திரனை தான் பொதுச்செயலாளராக ஏற்கவில்லை என்று கூறியுள்ளார். சி.வி.கே.சிவஞானமும் சுமந்திரனும் முறையே பதில் தலைவரும் பதில் செயலாளரும்தான். கட்சியின் வழக்கு தவணைகளை சிறிதரன் தரப்பு வேண்டுமென்றே இழுத்தடித்திருக்காவிட்டால் இப்பதவிகளுக்கான தேர்வு இந்நேரம் முறைப்படி நடந்து முடிந்திருக்கும். சிறிதரனைத் தேர்வு செய்வதற்கென்றே அழைத்து வரப்பட்ட வெளியாள்கள் பங்கேற்பின்றி, புலம்பெயர் பணத்தலையீடு இன்றி, முறையான பொதுக்குழு உறுப்பினர்களின் பங்கேற்போடு மட்டும் நடத்தப்படும் உட்கட்சித் தேர்தல் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படகூடியது. கட்சியின் ஒற்றுமைக்கும் தமிழ் மக்களின் நலன்களுக்கும் சிறிதரன் ஊடாக ஆப்பு வைக்க நினைக்கும் தரப்பு எதுவென்று எல்லோருக்கும் தெரியும். தமிழ் மக்கள் பலர் கூட சிறிதரனை தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை, காரணம் அவரது வெற்றுக் கொள்கைகளும், ஆளுமை அற்ற தன்மையும், போருக்கு பின்னரான தாயக அரசியல் பாதையில் குறுக்கே புகுந்து ஓட நினைக்கும் சில புலம் பெயர் அமைப்புகளின் தாளத்திற்கு ஆட்டம் போடுவதுமே.

ஆனால் கற்றறிந்த சட்டத்தரணியான சுமந்திரன் இவ்விடயத்தில் மீண்டும் முதிர்ச்சியை (maturity) வெளிப்படுத்தத் தவறிவிட்டார். நாய்கள் குரைத்தாலும் வண்டி நகர்ந்து செல்லும் (Dogs may bark, but the caravan moves on) என்னும் ஆங்கில சொல்லாடலைப் போல் அவர் இந்த விடயத்தை அணுகி இருக்கலாம்.

“இது சிறிதரனின் கருத்து மட்டுமே. இந்த நியமனங்கள் கட்சியின் யாப்பு படியே நடந்தேறின. ஆதலால் அவரின் கருத்து அறியாமையாலும் ஆதங்கத்தினாலும் தெரிவிக்கப்பட்டது. கட்சியின் நடவடிக்கைகள் தற்போது கட்டுக் கோப்பாக நடந்தேறின வருவது சிறிதரனுக்கு இஷ்டமில்லை போலும்” என்று கூறி அதை கடந்து சென்றிருக்க வேண்டுமே தவிர, என் ‘பவரை’ நான் காட்டுகிறேன் என்று பதில் சண்டித்தனம் செய்திருக்க கூடாது. நல்ல வேளை பதில்

தொடர்ச்சி▼




# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஒரு 'போஸ்மோர்ட்டம் ரிப்போர்ட்'!

தொடர்ச்சி▲

தலைவரின் பொறுப்புவாய்ந்த நடவடிக்கையால் மீண்டுமொரு குழப்பம் தவிர்க்கப்பட்டது .

சிலரின் தூண்டுதல்களால் கட்சிக்குள் பிரச்சினைகளையும் குரோதங்களையும் திரும்பத் திரும்ப கிண்டி விடுவதனால் மீண்டும் வாக்கு வங்கி மேலும் சிதறுவது உறுதி என்பதை இவர்கள் என்றுதான் உணர்ந்து கொள்வார்களோ? எனவே தமிழரசுக் கட்சியினர் ஒரு முகமாக செயற்பட்டு இந்த குடுமி பிடி சண்டையை முடிவிற்கு கொண்டு வரவேண்டும்.

சிறிதரன் அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தலைவராகவும், பின்னர் வரும் இரு வருடங்களுக்கு சுமந்திரன் தலைவராகவும் நீடிப்பது போல் ஒரு சமரச உடன்பாடு செய்தால் கட்சியின் அத்திவாரமும் பலனடையும், தலைவர்களின் செல்வாக்கும் பெருகும். மக்களிடையே நம்பிக்கை மீண்டும் துளிர் விடும். ஆனால் இரண்டு விடயங்களை முக்கியமாக முன்னெடுக்க வேண்டும். ஒன்று தாயக அரசியலின் கள நிலைவரம் தெரியாமல் வெளியில் இருந்து தங்கள் சொற்படி ஆட்டி வைக்க நினைக்கும் ஒருசில புலம்பெயர் வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்குத் தாளம் போடுவதை சிறிதரன் நிறுத்த வேண்டும். அதேபோல் சுமந்திரனும் தன்னிச்சையாக செயற்படாமல் கட்சியின் மத்திய குழுவின் முடிவுகளை செயற்படுத்த வேண்டும்.

இரண்டாவது அடுத்த தலைமுறை இளம் தலைவர்களை, பெண்கள் உட்பட, உடனடியாக தயார்படுத்த வேண்டும். மாறாக தேர்தல் நேரத்தில் மட்டும் இவர்களை முன்தள்ளி அப்புறம் காணாமல் ஆக்குவதில் எந்த வித பலனும் இல்லை. அத்துடன் எல்லைக் கிராமமான வன்னி இரண்டாம் தடவையும் சறுக்கி உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுப் போன வைத்தியர் சத்தியலிங்கத்தை அங்கே தேசியப் பட்டியலில் உறுப்பினராக நியமித்தமை தவறு என்றே தோன்றுகிறது. ஒரு மாற்றீட்டை உடனடியாக தேடுவது நல்லது -அடுத்த தேர்தல் வரும்வரை காத்திருக்காமல். மன்னார் பிரதேசத்தில் கூட பெறுபேறுகள் திருப்திகரமானதாக இல்லை.

### சங்குக் கூட்டணி


தமிழ்ப் பிரதேசங்களில் இரண்டாம் இடத்தை தேசிய மக்கள் சக்தி பிடித்துக் கொள்ள, மூன்றாவது ஸ்தானத்தை தமிழரசுக்கட்சியின் முன்னாள் பங்காளிகளாக இருந்து பிரிந்து சென்ற தமிழ் தேசிய ஜனநாயக முன்னணி (சங்கு) பிடித்துள்ளது. இக்கூட்டணியில் புதிய வரவாக முன்னாள் போராளிகளும் மற்றும் சிலரும் இணைந்துள்ளார்கள். ஆயினும் இக்கூட்டணியின் வாக்குவங்கி தமிழரசுக்கட்சி பெற்றவாக்குகளுடன் ஒப்பிடும் போது கிட்டத்தட்ட 28 வீதம் மட்டுமே. இப்போதாவது தங்கள் பலம் என்னவென்பது இவர்களுக்கு புரிந்திருக்கும். த.தே. கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை செல்வம் குறிவைத்து அது கிடைக்கவில்லை என்றவுடன் முறித்துக் கொண்டு கிளம்பியமை மட்டுமல்ல, பிரிவிற்கு காரணம் சுமந்திரனே என சேற்றை வாரி இறைத்தது, மல்லாக்கப் படுத்துக் கொண்டு மேலே துப்பிய கதையாக முடிந்தது.

கூட்டமைப்பாக இயங்கும் போது இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்துவது, தனிப்பட்ட ஆதாயங்களுக்காக மாறி மாறி வாக்களிப்பது போன்றவற்றை இனியாவது கைவிட்டு மீண்டும் கூட்டமைப்பாக இயங்கினால் இவர்கள் அனைவருக்கும் நன்று என்பது வெளிப்படை. ஆனால் ஒன்று, விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக தமிழரசு கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு தருகிறோம், எனவே நாங்கள் பெரும்பான்மையாக இல்லாத ஒரிரு சபைகளை எங்களுக்கு தாருங்கள் என்று கேட்பது தார்மீகம் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் எதற்காக கஜேந்திரகுமார் கூட்டணியுடன் சேர்ந்து இயங்க ஆர்வம் காட்டவில்லை? ஏனெனில் அங்கு நடப்பது தனிமனித காட்சி (One man Show). இவர்களது குரல்கள் அங்கு எடுபடாது என்று தெரியும். எனவே இனியாவது ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்காது அடுத்து வரும் தேர்தல்களில் மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு கூட்டமைப்பாக இயங்க வேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் விருப்பம்.

### சைக்கிள் கட்சி

தமிழரசுக் கட்சியினர் மீது வசைபாடுவதையே பிரதான கொள்கையாக இந்த தேர்தலில் முன்வைத்த கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் கட்சியும் அதன் அதிரி புதிரி கூட்டாளிகளும் 4 ஆவது இடத்தையே பிடிக்க முடிந்தது. இதில் ஐங்கரநேசன் ஊழல் குற்றச்சாட்டுகளால் விக்னேஸ்வரனால் வெளியேற்றப்பட்டவர். இப்போது மரம் நடுகை என்னும் புண்ணிய காரியத்தை செய்து வருகிறார். இந்த அணியில் சேர்ந்த ஜனநாயக தமிழரசுக் கட்சியினர் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள் உண்மையிலேயே தேர்தல் டிக்கெட் கிடைக்காத காழ்ப்புணர்வால் சேர்ந்த கூட்டம். ஒருவரின் பத்திரிகையோ தமிழசுக் கட்சியை உள்குத்து குத்தி, சேம் ஸைட் கோல் போட்டுக்கொண்டு இருந்தது மட்டுமல்ல, பிரபலமான எல்லோராலும் மதிக்கப்பட்ட, சமய, சமூக தொண்டாற்றும் ஒருவரை பொய்க்குற்றச்சாட்டுகளை சுமத்தி கேவலப்படுத்தியது. இக்கட்சியில் உள்ள ஜனாதிபதி சட்டத்தரணியின் ஒரே கொள்கை சுமந்திரன் என்ன சொன்னாலும் அதை வைத்து அவர் மேல் வசை பாடுவது. இந்த நெல்லிக்காய் மூடை கட்சி விரைவில் காணாமல் போய் விடும். இவர்களுடன் தனி ஆவர்த்தனம் வாசிக்கும் சிவாஜிலிங்கம் மற்றும் சிறிகாந்தா போன்றோரும் உள்ளனர். ஆச்சரியம் என்னவென்றால் நாடாளுமன்ற தேர்தல் தோல்வியானது 24 கரட் தங்கத்தை, தகரங்களுடன் சேரவைத்தது என்பதுதான்! தனக்கு பணப் பின்புலமாக உள்ள சில புலம்பெயர் அமைப்புகளைத் திருப்திப் படுத்தும் முகமாக மற்றவர்கள் அனைவருக்கும் துரோகிகள், இந்தியாவின் அடிவருடிகள் என முத்திரை குத்தியவர்கள், உள்ளூராட்சி தேர்தலில் ஒற்றுமை கீதம் பாட ஆரம்பித்தார்கள். ஆயினும் தமிழரசுக் கட்சியை மட்டும் மேடைக்கு மேடை மட்டம் தட்டுவதை கஜேந்திரகுமார் அன்ட் கோ விட வில்லை. 'ஏக்கியராஜய' விடயம் நன்கு தெளிவு

தொடர்ச்சி▼


# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஒரு 'போஸ்மோர்ட்டம் ரிப்போர்ட்'!

தொடர்ச்சி▲

படுத்தபட்ட பின்பு கூட வேண்டுமென்றே தப்பான கருத்துகளை கஜேந்திரகுமார் மேடைக்கு மேடை கூறியதன் காரணம் தமிழரசின் வாக்குகளை எப்படியாவது குறைக்க வேண்டும் என்ற நோக்கமே. அது பெருமளவில் தோல்வியிலேயே முடிந்தது. இந்த சைக்கிள் குடும்பம் குழப்பி அடிப்பதில் வல்ல வர்கள். ஜி.ஜி சமஷ்டியை, சம்மட்டி என விளித்தவர். அநியாயத்திற்கு 50:50 கோரிக்கையை முன்வைத்து (நியாயமாக 75:25 கேட்டிருக்கலாம்) சிங்களவரின் எதிர்ப்பலைகளைத் தூண்டி விட்டார். இறுதிக் காலத்தில் தவறுகளை உணர்ந்து தந்தை செல்வாவின் வேண்டுகோளுக்கு இணங்கி தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்தார். அபூர்வமாக தமிழ் தலைமைகள் அனைத்தும் ஒன்றுபட்ட ஒரே நிகழ்வு வரலாற்றில் இது ஒன்றாகத்தான் இருக்கும். இந்த ஒற்றுமை பின்நாளில் அரசியல், மற்றும் போராளிக் குழுக்களிடையே கூட, ஏன் இன்றுவரை சாத்திய மாகவே இல்லை.

கஜேந்திரகுமாரின் அப்பா, குமார் பொன்னம்பலம் தான் த.வி.கூட்டணியை முதலில் உடைத்தவர், காரணம் வட்டுக்கோட்டை தொகுதியில் 1977 தேர்த லில் போட்டியிட அழைக்கப்பட்ட போது, யாழ்ப்பாணத் தொகுதி தான் வேண்டும் என்று. மீண்டும் சைக்கிள் வெளியே வந்தது. அவரின் பிரசாரம் கூட தனி ஈழக் கோரிக்கைக்கு எதிராகவே இருந்தது . அந்த தேர்தலில் படு தோல்வியை தழுவினார். பின்னர் அரசிற்கு எதிரான கடும்போக்கான நிலைப்பாட்டை எடுத்தாலும், இறுதி வரை நாடாளுமன்றத்திற்குச் செல்லும் அவரது ஆசை நிறைவேறவே இல்லை. இப்போது கஜேந்திரகுமாரின் நோக்கம் தமிழரசுக் கட்சியில் உள்ள ஆளுமைகளை எப்படியாவது விலக்கி விட்டு இருகட்சிகளையும் இணைத்து, தானே தலைவராகி விடுவது தான். இதனால்தான் நாடாளுமன்ற தேர்தலில் தோற்ற சுமந்திரனை நிராகரிக்கச் சொல்லி தமிழரசுக் கட்சியினரிடம் வேண்டுகோள் விடுத்தார் . அந்தப் பருப்பு அவியாத நிலையில் மீண்டும் தமிழரசுக் கட்சியையே நிராகரியுங்கள் எனப் பிரசாரம் செய்தார். இவ்வளவிற்கும் தமிழரசுக்கட்சியினர் தாங்கள் எடுத்துக் கொண்ட தீர்மானத்தின்படி, சக தமிழ்க் கட்சிகளை விமர்சனம் செய்வதில்லை என்று உறுதியாக இருந்தார்கள். கீறல் விழுந்த ரெக்கார்டு போல் அவர் திரும்பத் திரும்ப சொல்லிய ஏக்கிய ராஜ்ய கதைக்கு மட்டும் தமிழரசால் அவ்வப் போது விளக்கம் அளிக்கப்பட்டது. மக்கள் என்ன சொங்கிகளா கஜேந்திரகுமாரின் உள்நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு! இறுதியில் சைக்கிள்கூட்டணி சங்கு கூட்டணியை விட குறை வான வாக்குகளையே பெற்றது. சங்கு கூட்டணியினர் சைக்கிளுடன் கூட்டு வைக்க விரும்பாத காரணமே கஜேந்திர குமார் எல்லோரையும் ஒதுக்கி விட்டு மேலாதிக்கம் செலுத்துவார் என்ற அச்சமே. எனவே இனியாவது கஜேந்திரகுமார் அனைவருடனும் ஒன்றிணைந்து நடைமுறை சாத்தியமான தீர்வு திட்டங்களை வகுத்து, அந்த இலக்குகளை அடை வதற்கு , எல்லா தமிழ் கட்சிகளுடனும் ஒன்றிணைந்து, தற்போதைய அரசுடன் ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்பதே மக்க ளின் எதிர்பார்ப்பு. அத்துடன் புலம்பெயர் அமைப்புகளின் ஏவுதலின்படி மக்களை தூண்டி விட்டு இனக்குரோ தங்களை வளர்க்கும் செயற்பாடுகளை தவிர்க்க வேண்டும்.

### விக்கியின் மான் கட்சி

இறுதியாக விக்னேஸ்வரனின் மான் கட்சி. நல்லூர் தொகுதியில் மட்டும் சற்றே செல்வாக்கை வெளிக்காட்டி, மற்ற இடங்களில் மாய மான் ஆகி விட்டது. தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்திருகாக வேண்டிய ஒருவர் , முதலமைச்சர் பதவி கிட்டியவுடன் வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாக சம்பந்தனையும், கட்சியின் தலைமைப் பதவியையும் குறிவைத்து கலகம் பண்ண ஆரம்பித்தார். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதைப் போல் வட மாகாண சபையில் நூற்றுக்கணக்கான வெற்றுத் தீர்மானங்களை நிறை வேற்றிய சாதனை அன்றி வேறொன்றும் இல்லை. வேதனையாக, மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஒதுக் கப்பட்ட நிதியில் பெரும் பகுதியை திருப்பி வேறு அனுப்பினார் என்ற குற்றச்சாட்டும் கூறப்படுவதுண்டு. இறுதியில் பார் லைசன்ஸ் வழங்கி, அதற்கும் ஒரு குதர்க்கமான விளக்கத்தை கொடுத்து, மக்களின் வெறுப்புகளுக்கு ஆளாகி, இப்போது தானாகவே ஓரமாக ஒதுங்கி விட்டார். இந்தக் கட்சியினர் செய்ய வேண்டியது என்னவென்றால் மீண்டும் தாய்க் கட்சியான தமிழரசுடன் இணைந்து கொள்வதே. தொடர்ந்து தனித் தவில் வாசிக்க நினைத்தால், அரசியல் அநாதைகளாக்கப்படுவது நிச்சயம்.

இதை விட இன்னும் சில உதிரிக்கட்சிகள் கூட மழைக்கு முளைத்த காளான்கள் போல் இருக்கின்றனர். நம் ஊரில் கம்பனி ஆரம்பிப்பதை விட கட்சி ஆரம் பிப்பது சுலபம். இந்த ஐந்து , பத்து கட்சிகளை கணக் கெடுக்காது விடுதல் நன்று.

இந்த தேர்தல் தந்த பாடங்களை மேலே குறிப்பிட்ட தமிழ் தேசிய கட்சிகள் பரிந்து கொள்ள வேண்டும் . மக்கள் தெளிவாகத் தான் இருக்கிறார்கள். நீங்கள் நடத்தும் தகிடு தத்தங்களை பார்த்து மனம் நொந்து போனதால தான் நாடாளுமன்ற தேர்தலில் அநுர அலையில் மாட்டிக் கொண்டார்கள். அதற்கு முழுக் காரணம் தமிழ்க் கட்சிகளே. போதாக்குறைக்கு ஒரு வாய்க்கொழுப்பெடுத்த வைத்தியரும் இந்த சந்தடி சாக்கில் நாடாளுமன்றம் புகுந்து விட்டார் (அதே வேகத்தில் விரைவில் வெளியே வரலாம்!). தமிழ ருக்கும் ஒற்றுமைக்கும் சம்பந்தமே இல்லை என்பது வரலாறு. அது சேர, சோழ, பாண்டிய, பல்லவர்கள் ஆகட்டும் அல்லது ஈழத்தின் 25க்கு மேற்பட்ட போரா ளிக் குழுக்களாகட்டும் அல்லது போருக்கு பின்னரான தற்போதைய அரசியல் களமாகட்டும். இனியாவது இந்தக் கூற்றை நீங்கள் பொய்ப்பிக்க வேண்டும். தனித்து நின்று கூக்குரல் போடாமல் ஒன்று பட்டால் தான் தமிழ் மக்களுக்கு உண்டு வாழ்வு என்பதை புரிந்து கொண்டு பொறுப்புணர்வுடன் ஒரு குரலாக ஒருமித்து செயற்பட்டால் மட்டுமே தற்போது அரசியல் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு விடிவு பிறக்கும் என்று உணர்ந்து கொள்ளுங்கள். பதவிகளையும், கதிரைகளையும், புலம்பெயர் பணத்தையும் குறிவைத்து நடத்தி வரும் அரசியல் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, நியாய பூர்வமான யதார்த்தமான ஒரு தீர்வைக் கூட்டாக முன்வைத்து செயற்படுதல் அவசியம். இல்லை என்றால் வடக்கு கிழக்கில் அடுத்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மீண்டும் முன்னிலை பெறுவது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, அரசியலில் உங்கள் அனைவருக்கும் நிரந்தர ஆப்பு வைக்கப்படுவதும் உறுதி.

# தமிழ் - முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றித்த போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி இது!



## காணி சுவீகரிப்பு வர்த்தமானி வாபஸ் குறித்து மு.கா. செயலர் நிஸாம் காரியப்பர் பெருமிதம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

முல்லைத்தீவு காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வாபஸ் பெற்றிருப்பது தமிழ், முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றிணைந்த போராட்டத்திற்கு கிடைத்திருக்கின்ற வெற்றியாகவே கருதுகிறோம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு காணி சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பாரதூர தன்மைகள் மற்றும் அதனால் ஏற்படவுள்ள பாதக விளைவுகள் தொடர்பாக தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஒற்றுமையுடன் குரல் கொடுத்ததன் விளைவாகவே இந்த சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வாபஸ் பெற்றிருக்கிறது.

இது தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு கிடைத்திருக்கின்ற பாரிய வெற்றியாகும்.

மேலும், இலங்கை வாழ் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் – குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த மக்கள் – எதிர்காலத்திலும் தங்களுடைய உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக இவ்வாறு ஒன்றாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது என்று மு.கா செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# யாழில் தூர சேவைகளுக்கான புதிய பஸ் நிலையம் சங்கங்களின் சார்பில் சிறிதரன் எம்.பியிடம் மகஜர்!

நெடுந்தூர சேவைகளுக்காக யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ்நிலையம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் ஆரியகுளம் பகுதியில் உள்ள, வரையறுக்கப்பட்ட யாழ். மாவட்ட தூர சேவைப் பேரூந்து உரிமையாளர்களின் கம்பனி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து வடமாகாண தனியார் பஸ் உரிமையாளர்களும், அவர்களை பிரதிபலிக்கும் சங்கத்தினரும் இந்த மகஜரை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீண்ட நாள்களாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் நெடுந்தூர போக்குவரத்து சேவை தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத் தருமாறு இந்த மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது.







Jaffna District Long Trip Bus Service Owners' (Guarantee) Limited.

Reg No GL2302 | Tele/Phone No / Fax No 021 221 7015 | No.409, Stanley Road, Jaffna.

M.Director

A.Secretary

D.Finance



# சென்னையில் உள்ள அமெரிக்காவின் தூதரகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை அண்ணா சாலையில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு மர்ம நபர்கள் இ மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு வெடிகுண்டு நிபுணர்கள், தூதரகத்தில் சோதனை மேற்கொண்டனர். அப்போது வெடி குண்டு மிரட்டல் வெறும் வதந்தி எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் மிரட்டல் விடுத்த மர்ம நபர்கள் குறித்து ராயப்பேட்டை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# மாநிலங்களவைத் தேர்தல் குறித்து கட்சித் தலைமையே முடிவெடுக்கும்

## நயினார் நாகேந்திரன் தெரிவிப்பு

மாநிலங்களவைத் தேர்தல் விவகாரத்தில் கட்சித் தலைமை எடுக்கும் முடிவின்படி செயல்படுவோம் என பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“டாஸ்மாக் ஊழல் தொடர்பாக அமலாக்கத்துறை விசாரிக்க உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. அதில் தொடர்புடைய, துணை முதல்வரின் நண்பர்களான ரிதீஸ், ஆகாஷ் ஆகியோரை விசாரித்தால் உண்மை தெரியும் என்று அமலாக்கத்துறை கூறியுள்ளது. அவர்கள் ஏன் பயந்து வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும்?

பிரதமர் மோடிக்கும், அமலாக்கத்துறைக்கும் பயப்படமாட்டோம் என்று துணை முதல்வர் உதயநிதி கூறியுள்ளார். 2011 சட்டப்பேரவைத் தேர்தலின்போது அமலாக்கத்துறை சோதனைக்குப் பயந்துதான் கூட்டணிப் பேச்சு வார்த்தையை முடித்தார்களா? யார் ஆட்சி செய்தாலும், அமலாக்கத்துறை நடவடிக்கைகள் தொடரும்.



மாநிலங்களவைத் தேர்தலைப் பொறுத்தவரை நான் தனிப்பட்ட முறையில் கருத்து சொல்ல முடியாது. தலைமைதான் முடிவு செய்யும்.

எங்களிடம் இருப்பது 4 எம்.எல். ஏக்கள்தான். தலைமை என்ன முடிவெடுக்கிறதோ, அதன்படி செயல்படுவோம். நாங்கள் அ.தி.மு.கவோடு கூட்டணியில் இருக்கிறோம். அ.தி.மு. கவுக்கு ஆதரவு தருமாறு கூறினால், ஆதரவு தருவோம். நகைக் கடன் பெறுவது தொடர்பான புதிய விதிமுறைகள் குறித்து, எங்கள் கொமிட்டியில் பேசியுள்ளோம். இது குறித்து மத்திய நிதி அமைச்சருக்கு கருத்துகளைத் தெரிவிப்போம்.

தி.மு.க. ஆட்சியால் மக்களுக்கு ஏராளமான சிரமங்கள் உள்ளன. சொத்துவரி பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. மின் கட்டணம் ஆண்டுதோறும் அதிகரிப்பதால் தொழிற்சாலைகள் நடத்த முடிவதில்லை. காவல் துறையால் சட்டம்-ஒழுங்கை சரிவரப் பராமரிக்க முடியவில்லை. எனவே, மக்களுக்கு விரோதமான திமுக ஆட்சிக்கு எதிராக அனைத்து கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்.

மத்திய அரசு நிதி கொடுக்காததால் எந்தமாணவரும்பாதிக்கப்படவில்லை. ஏற்கெனவே, தமிழக முதல்வர் டில்லியில் பிரதமரை தனியாக சந்தித்துப் பேசியுள்ளார். நிதி தொடர்பாக அவர் பேசினாரா என்பதை முதல்வர் தான் விளக்க வேண்டும்.” என்றார்.

# இந்தியா மீது மீண்டும் தாக்குதல் நடத்தினால் பாகிஸ்தான் இல்லாமல் அழிந்து போய்விடும்

## மேற்கு வங்க பா.ஜ.க. தலைவர் திலீப் கோஷ் எச்சரிக்கை

இந்தியா மீது மீண்டும் தாக்குதல் நடத்தினால் பாகிஸ்தான் இல்லாமல் அழிந்துபோகும் என்று மேற்கு வங்க பா.ஜ.க தலைவர் திலீப் கோஷ் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் பாசிம் மேதினிப்பூரில் பேசிய அம்மாநில பா.ஜ.க. தலைவர் திலீப் கோஷ்,

“நாடு பயங்கரவாத செயல்களை பொறுத்துக்கொள்ளாது என்பதை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே அவர்கள் நாட்டிற்காக பேச வேண்டும். பயங்கரவாதிகள் பஹல்ஹாமில் ‘சிந்தூர்( குங்குமம்)’ பார்த்து மக்களைக் கொன்றனர். அதனால்தான் ஒபரேஷன் சிந்தூர் நடந்தது. அவர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தினால், பாகிஸ்தான் இல்லாமல் போய்விடும்.



பிரதமர் மோடியின் ஆட்சியில் இந்தியா பதிலடி கொடுத்து தாக்கிய விதத்தை பாகிஸ்தான் இப்போது புரிந்துகொண்டுள்ளது. அதே தவறை அவர்கள் மீண்டும் செய்தால், அவர்களுக்கு தோட்டாக்கள் மற்றும் ஏவுகணைகள் மட்டுமே கிடைக்கும். அவர்களின் முதுகு இப்போது உடைக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் இப்போதாவது, அவர்கள் முழு உலகத்திலிருந்தும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் இதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும், இல்லையெனில் இந்தியா அவர்களை விடாது.” என்று கூறினார்.





# இரசாயன தொழிற்சாலையில் பாரிய வெடிப்புச் சம்பவம்

### கிழக்கு சீனாவில் புகைமூட்டம்

கிழக்கு சீனாவில் உள்ள இரசாயன தொழிற்சாலை ஒன்றில் பாரிய வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இதனை அடுத்து அந்த தொழிற் சாலையிலிருந்து சாம்பல் மற்றும் செம்மஞ்சள் நிறங்களில் புகை வெளியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், உடனடி மீட்பு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிழக்கு சீனாவின் கோமி நகரில் உள்ள இரசாயன தொழிற்சாலை ஒன்றிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில் ஏற்பட்ட பாதிப்பு விபரங்கள் இன்னும் வெளி யாகவில்லை.

தீயணைப்பு நடவடிக்கைகளில் 55 வாகனங்களுடன் 232 தீயணைப்பு படை வீரர்களும் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# துருக்கி வெளிவிவகார அமைச்சருடன் ரஷ்ய ஜனாதிபதி புடின் கலந்துரையாடல்

### உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து அவதானம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினும், துருக்கியின் வெளிவிவகார அமைச்சரும் உக்ரைனில் நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டுவரு வதற்கான முயற்சிகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

மொஸ்கோவில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் ஏலவே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக துருக்கி வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் ஹக்கன் ஃபிடன் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மொஸ்கோ சென்றுள்ள நிலையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான எதிர்கால பேச்சு வார்த்தை இடம்பெறவுள்ள காலப் பகுதி உள்ளிட்டவை தொடர்பில் எந்த வித முன்னறிவிப்புகளும் வெளியாக வில்லை. இருப்பினும் நேட்டோ நட்பு நாடான துருக்கி சமாதான பேச்சுவார்த் தைகளை நடத்த முடியும் என தொடர்ந்தும் கூறி வருகின்றது.







# அணிவகுப்பில் ஈடுபட்டவர்கள் மீது கார் மோதியதால் 27 பேர் காயம்

பிரித்தானியாவின் - லிவர்பூல் நகர் பகுதியில் அணிவகுப்பில் ஈடுபட் டிருந்தவர்கள் மீது கார் ஒன்று மோதியதில் 27 பேர் காயமடைந் துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

லிவர்பூல் எஃப்சி காற்பந்தாட்ட அணியின் ரசிகர்களால் நடத்தப்பட்ட அணிவகுப்பில் கலந்து கொண்ட வர்கள் மீதே மேற்படி மோதியதாகவும் காயமடைந்தவர்களில் 4 சிறுவர்களும் அடங்குகின்றனர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 53 வயதுடைய பிரித்தானிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் அந்த காரின் சாரதி எனவும் நம்பப்படுவதாக மெர்சிசைட் பொலிஸ் தெரிவித்துள் ளது. இந்த சம்பவம் ஒரு பயங்கரவாத செயற்பாடாகக் கருதப்படவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.05.2025




சம்பிரதாய விழாக்கள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து கொள்வதன் மூலம் ஆறுதல் மற்றும் நிவாரணம் கிடைக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலையை கையாள அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்றுங்கள்.உங்கள் துணையின் மீது தவறான கருத்து கொண்டிருப்பீர்கள். இது உங்களுடைய உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவு காண சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.




இன்று புதிய மனிதர்களுடன் கலந்துறவாடுவீர்கள். புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள இது உகந்த நாள். அனுபவப் பூர்வமான பாடம் இதன் மூலம் கற்கலாம்.

உங்கள் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். உங்கள் நேர்மையான அணுகுமுறை காரணமாக பணியில் சாதிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். அதன் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணபுழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் குடும்பத்துடன் வெளியே செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்று ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவதற்கு உகந்த நாள். இன்று பிரார்த்தனை மேற்கொள்வது மற்றும் இசை கேட்பது உங்களுக்கு ஆறுதலைத் தரும். இந்த நாட்டங்கள் தான் நீங்கள் விரும்பும் ஆறுதலை உங்களுக்கு பெற்றுத் தரும்.

பணியிடத்தில் கடுமையான பணிகள் காணப்படும். உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக வன்மையாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணப்புழக்கும் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.தோல் எரிச்சல் காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்க வேண்டும்.




இன்று சௌகரியங்களை அனுபவிக்கும் நாள். இன்றைய நாள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். இன்று மனவலிமை அதிகம் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்களின் செயல் திறன் சக பணியாளர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். நீங்கள் இருவரும் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்றைய நாளை நீங்கள் புதிய முதலீடுகள் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.இன்று உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கடினமான சூழ் நிலை காணப்படும். அது உங்கள் நாளின் சீரான நிலையை பாதிக்கும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை சமாளிக்க வேண்டும். அமைதி பெற பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். நற்பலன்களைக் காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையிடம் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்துக்காகச் சில தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




கடினமான சூழ்நிலைகளை கையாள பொறுமை அவசியம். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் பணிகளை மேற்கொள்ளும்போது கடினமான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர் களுடன் நல்லுறவு பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் சமநிலை மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மன வலிமை நிறைந்து காணப்படும். எதிர்பாராத நன்மைகள் திருப்தியை அளிக்கும். விருந்தினர்கள் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியிடச் சூழல் இனிமையாகவும் மகிழ்ச்சி கரமாகவும் காணப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் பணவரவு காணப்படும். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று திட ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமாக இருக்காது. அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களை வைத்திருப்பது நல்லது. இன்று திறமையாக செயலாற்ற அனுசரணையான அணுகுமுறை தேவை.பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் மிகவும் அவசியம்.

சில கருத்து வேறுபாடு காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவுப் பிணைப்பு சற்று பாதிப்படையும்.

இன்று நிதிநிலைமை அபாரமாக இருக்கும். கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு அதிருப்தி அளிக்கும்.இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் உங்கள் ஆரோக்கியத்துக்குச் சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.05.2025




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நன்மை அடையலாம்.

பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்த இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. எனவே பொறுமை மேற்கொள்ளுங்கள்.பேசுவதைத் தவிர்த்திடுங்கள்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். பண இழப்பு காணப்படுகின்றது.




உங்கள் மனோதிடம் மற்றும் உற்சாகம் காரணமாக இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நல்ல பண வரவு காணப்படுகின்றது. உங்கள் கடின உழைப்பு காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பண வரவு ஏற்படும்.




இன்று தேவையில்லாமல் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். திறமையாகப் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் கடுமையான விவாதங்கள் இருவரிடையே ஏற்படலாம். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பண வரவு எதிர்பார்த்த அளவுக்கு காணப்படாது. தேவையற்ற செலவுகள் எழும்.




புத்திசாலித்தனத்தை சரியான நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் இன்று சாதகமான பலன்கள் கிட்டும். உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் சிறப்பான செயல்திறன் மூலம் பணியில் வெற்றி பெறும் நிலை காணப்படும். உங்கள் பணியின் மூலம் கூடுதல் நற்பலன்கள் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சிறந்த தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அன்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறப்பாக சேமிக்க இயலும். புதிய முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.




# அந்தனி ஜீவாவின் பிறந்த தினத்தில் அவரை நினைவேந்தி ஒன்று கூடல்




புரவலர் புத்தகப் பூங்கா ஏற்பாட்டில், அமரர் அந்தனி ஜீவாவின் 81 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு, இலக்கியப் புரவலர் ஹாஷிம் ஓமர் முன்னிலையில், பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நினைவு தினக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மேமன்கவி வரவேற்புரை நிகழ்த்த, நிகழ்விற்கு வருகைதந்த திருமதி அந்தனி ஜீவா உட்பட அவர் மீது அபிமானம் கொண்ட நண்பர்கள் பலரும் கருத்துரைகள் வழங்கினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்த கே.பொன்னுத்துரை நன்றியுரை வழங்கினார்.